**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.252/2018**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. கி. கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் | தந்தை பெயர் | : கருப்பையா |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 05.09.2024

**D.W. : 1**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதிகள் தற்போது வரை தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி என்மீதும், 2 ம் பிரதிவாதியின் மீதும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்து இருக்கிறோம். நான் வாதிகள் மீது சுவாதீனம் மீட்பு கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. நான் மனு செய்துள்ளேன். நான் பொது அதிகார முகவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியான ஜெயக்குமாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். நான் பவர் ஏஜென்ட் மூலம் கிரையம் பத்திரம் எழுதி பெற்றேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கியதாக கூறும் சொத்து அந்த தேதியில் பாகம் பிரிக்கப்படாமல் இருந்தது என்றால் சரியல்ல. அந்த

சொத்து முழுவதும் 3ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெற்ற சொத்தாகும். நான் வாதிகளிடம் கடனாக மட்டுமே கொடுத்தேன் என்றும் அதன் பொறுப்புறுதியாக ஒரு ஆவணத்தை எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல.

**(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.